**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 135/2022**
**Deposition of witness of Defendant – D.W.1(வீரையா)**
**29.10.2024**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனது பூர்வீகம் ஒடுகம்பட்டி கிராமம் என்றால் சரிதான். ஒடுகம்பட்டி கிராமத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம் இன மக்களின் முன்னோர்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. வழக்கு வாதியின் ஆரம்ப கிரையதாரர் காதர் மைதின், பீர் கனி, முகமது மீரான் என்றால் சரியல்ல. அவர்கள் யாருடைய வாரிசுகள் என்று எதிர்வழக்குரையில் கட்சி செய்கிறேன் என்றால் முகமது காசிம் மற்றும் சிலரின் வாரிசுகள். மேற்கண்ட நபர்களின் வாரிசுகள் தாவா கிராமத்தில் தற்போது வசித்து வருகிறார்களா என்றால் தஞ்சாவூரில் வசித்து வருகிறார்கள்.

3. அவர்கள் தஞ்சாவூருக்கு எந்த வருடம் சென்றார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

4. அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் இன்னும் வாலியம்பட்டி கிராமத்தில் உள்ளது என்றால் இல்லை, அனைத்து சொத்துக்களையும் விற்றுவிட்டார்கள், வீட்டு மனை மட்டும் உள்ளது.

5. அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை யார் யார் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் நான் கிரையம் வாங்கியுள்ளேன். ராஜேந்திரன் கிரையம் வாங்கியுள்ளார். மற்றவர்கள் பெயர் தெரியாது.

6. வழக்கின் 2–வது பிரதிவாதி முகமது காசிம் தற்போது எங்குள்ளார் என்றால் தஞ்சாவூர் வடக்கூரில் உள்ளார்.

7. இந்த வழக்கில் 2–ஆம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதியின் முன்கிரையதாரர்கள் மற்றும் எனது முன்கிரையதாரர்கள் பற்றி தனித்தனியாக வம்சாவளி பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. நான் கூறிய விவரங்களின் அடிப்படையில்தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

10. தாவா சொத்தின் ஆரம்ப உரிமையாளர் யார் என்று எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சேக் முகமது என்று சொல்லப்பட்டுள்ளது.

11. நான் சேக்முகமதுவின் வாரிசுகளிடம் கிரையம் வாங்கினேன்.

12. வாதியின் வழக்குரையை படித்து பார்த்து தெரிந்துகொண்டேன். அந்த வழக்குரையில் தாவா சொத்துக்கள் 1958ஆம் வருடம் கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. 1958ஆம் வருடம் கிரையம் வாங்கப்பட்ட தாவா சொத்திற்குதான் நான் எதிர் கட்சி செய்கிறேன் என்றால் உண்மையான வாரிசுகளிடம் நான் கிரையம் வாங்கியுள்ளேன்.

14. நான் கிரையம் வாங்கிய சொத்தும், 1958ஆம் வருடம் கிரையம் வாங்கிய சொத்தும் ஒரே சொத்து தான் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

15. 1958ஆம் வருடம் கிரையம் வாங்கிய சொத்தை பொறுத்து நான் அடையாளம் தெரிந்துகொண்டேனா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

16. நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

17. எனது எதிர் வழக்குரையில் பத்தி 3-ல் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த எதிர் வழக்குரையில் முகமது இப்ராகிம், முகமது செரீப், முகமது காசிம் ஆகியோர் பல ஆண்டுகளுக்கு முன்பே பாகம் பிரித்து கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

18. எந்த வருடம், எந்த தேதியில், யார் முன்னிலையில் அவ்வாறு பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

19. அவ்வாறு வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்ட வகையில் கிராம வழக்கப்படி எங்களுக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என எனது கிரைய பத்திரத்தில் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை.

20. 1958ஆம் ஆண்டு தாவா சொத்தை பொறுத்து கிரையம் ஏற்பட்டுள்ளதை தெரிந்து கொண்ட பிறகு நானோ, எனது கிரையதாரர்களோ, அந்த கிரைய பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தோமா என்றால் மேற்படி விவரம் 2019ல் தான் தெரியும்.

21. அவ்வாறு தெரிந்த பிறகாவது நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை.

22. சொத்து கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

23. எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை வில்லங்கம் சான்றிதழ் பார்த்தேன் என்றால் 30 வருடங்களுக்கு பார்த்துள்னேன். அந்த பதிவு வில்லங்க சான்றிதழை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

24. 2–ஆம் பிரதிவாதி முகமது காசிம் ஊரில் தான் உள்ளார். அவரது தாத்தா பெயர் எனக்கு தெரியுமா என்றால் சேக் முகமது. சேக் முகமதுவின் அப்பா பெயர் ஞாபகம் இல்லை.

25. அதுசம்மந்தமாக 2–ஆம் பிரதிவாதியிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஓம்/–C.ராஜேஷ்
சார்பு நீதிபதி,
கீரனூர்.